அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 56/89(1)

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 07.
1993, ஏப்பிரல் மாதம் 23 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

தேசிய அரசாங்க சேவை மாகாண அரசாங்க சேவை
என்பவற்றிற்கு உத்தியோகத்தர்களை விடுவித்தல்
தொடர்பான விடயங்கள்.

1989, நவம்பர் மாதம் 15ஆந் திகதி வெளியிடப்பட்ட 56/89ஆம் இலக்கமுள்ள அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள மத்திய சேவைகளுக்கும் நாடளாவிய சேவைகளுக்கும் உத்தியோகத்தர்களை நியமித்தல், இடமாற்றஞ் செய்தல் சேவையிலிருந்து நீக்குதல், ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் தொடர்பாக, அரசியலமைப்புயாப்பின் 55(3) வது பிரிவுக்கு இணங்க அமைச்சரவைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுமூலம் செயற்படுத்துவதற்காகக் கையளிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க அதிகாரங்களைச் செயற்படுத்த வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் 1992.02.26ஆந் திகதி ஈ01/92ஆம் இலக்கங் கொண்ட சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

02. 1987இன் 42ஆம் இலக்கமுள்ள மாகாண சபைச்சட்ட மூலத்தின் 32(2)ஆவது பிரிவுக்கு இணங்க மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு ஆளுநர் அவர்கள் அதிகாரங்களை அந்த சட்டமூலத்தின் 32(1)வது பிரிவுக்கு இணங்க கையளிக்க இயலும் என்பதுடன், அது நிலவும் சட்டத்திட்டங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் இணங்கவே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

03. அதன்படி 1989 நவம்பர் மாதம் 15ஆந் திகதி வெளியிடப்பட்ட 56/89ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் (ஆ)(111), (11), (1) ஆகிய துணைப்பிரிவுகள் அரசியலமைப்பு யாப்பினதும் 1987ஆம் ஆண்டு 42ஆம் இலக்கமுள்ள மாகாண சபைச் சட்டமூலத்தினதும் 32(1), (2)வது ஏற்பாடுகளுடன் இணங்காமையினால் இப்பந்திகள் அகற்றப்பட்டுக் கீழ்வரும் பந்திகள் பதலீடு செய்யப்படுகின்றன.

(111) நாடளாவிய சேவையின் உத்தியோகத்தர்கள் மாகாண சேவைக்கு விடுவிக்கப்படும் காலத்தினும் அவர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள், சேவையிலிருந்து நீக்குதல் ஒழுக்காற்று கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவை பின்வரும் அதிகாரங்களால் ஒவ்வொரு சேவைக்கும் உரித்தான சேவைப்பிரமாணக் குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமையவே இருத்தல் வேண்டும்.

| சேவை | நியமன அதிகாரி |
|---|---|
| இலங்கை நிருவாகச் சேவை | அரசாங்க நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் |
| இலங்கை கணக்காளர் சேவை | திறைச்சேரியின் பிரதிச் செயலாளர். |

| | |
|---|---|
| இலங்கை பொறியியலாளர் சேவை | பொறியியலாளர் சேவைச் சபை |
| இலங்கை விஞ்ஞான சேவை | விஞ்ஞான சேவைச் சபை |
| இலங்கை கல்வி நிருவாக சேவை | கல்விச் சேவை ஆணைக்குழு |
| இலங்கை திட்டமிடல் சேவை | திட்டமிடல் சேவைச் சபை |
| இலங்கை விவசாய சேவை | விவசாய, அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் |
| இலங்கை விலங்கு உற்பத்தி அதிகார சபை | விவசாய, அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் |
| மருத்துவ சேவை நிபுணர்களும், நிபுணர்கள் அல்லாதவர்களும் | சுகாதார, மகளிர் விவகார செயலாளர். |

(11) மேற்கூறிய வகுதிகளுக்கு உட்படும் எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்காக நேரடியாகத்தென் படும் காரணங்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில் அவை தொடர்பாக ஆரம்ப நோக்கங்களை மேற்கொண்டு குற்றச்சாட்டுக்களைத் தயார் செய்து ஆரம்ப ஆய்வறிக்கையுடன் குறிப்பிட்ட நியமன அதிகாரியின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) நாடளாவிய சேவையின் உத்தியோகத்தர்கள் மாகாண அரசாங்க சேவைப் பதவிகளை வகிக்கும் போது அவர்களின் வருடாந்த சம்பள உயர்வுகளைக் கீழ்வருமாறு அனுமதித்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 11வது வகுப்பின் உத்தியோகத்தர்கள் | - | தலைமைச் செயலாளரால் |
| 1வது வகுப்பின் உத்தியோகத்தர்கள் | - | தலைமைச் செயலாளரின் சிபாரி பேரில் குறிப்பிட்ட நியமன அதிகா யினால். |

(11) எல்லா மாகாண ஆளுநர்களாலும் மேல் குறிப்பிடப்படும் அனைத்து உத்தி யோகத்தர்களின் பொருட்டும் உத்தியோகத்தரின் விடுவிக்கும் நிபந்தனைகளுக்கு அமையப் பதவியுடன் தொடர்புடைய கடமைகளை ஒப்படைக்கும் கடிதமொன்று வழங்கப்படும்.

ஒப்பம்: எம். என். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.